முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1202

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.01.2023, வெள்ளிக்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
   கந்தவேலன் என் சூட்சும
   அவதாரம் புரிந்துள்ள ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யான்
2. யானுமே ஞானஅறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் உன்ஆற்றல் உலகம்அறிய
   தானதர்ம பலம்கொண்டு உலகை மீட்க
   தவசியாக வந்த ஐயனே
3. ஐயனே உன்தர்மம் உலகம் எங்கும் பரவ
   அகிலமே தர்மலோகமாகி
   மெய்ஞான வாழ்வை உலகமக்கள்
   மேலான வரமாக உன்தீட்சை வழிஅடைந்து
4. அடைந்துமே உலகோர் மீள்வரப்பா
   அழியாமை கண்டு தேறுவரப்பா
   தடையற உன் தர்மமும் சன்மார்க்கமும்
   தரணியை அலங்கரித்தால் போதுமப்பா
5. அப்பனே இந்த கலியுகம்
   சடுதி ஞான யுகமாக
   ஆற்றல் கூடி உலகோர்க்கு
   பாதுகாப்பு மிக்க
6. மிக்கநல் ஞானஆட்சியாக
   முருகப்பெருமான் என்தலைமை கொண்ட
   ஆக்கமான ஞானமும் அறமும் தர்மமும்
   அளவிலா நீதியும்காக்கும் ஞானிகள் ஆட்சியாக
7. ஆட்சியாக ஞானவான்கள் நிறைந்த காலமாய்
   அமைந்திடும் ஞானசித்தர் லோகமாக
   ஆகவே மாற்றம் சடுதி காணும் அரங்கனுக்கு சக்திகூட
   ஆறுமுகன்யான் அனுதினம் சூட்சும பலம்கூட்டி
8. வகைபட அனுதினம் பிரம்ம வேளையில்
   வரமாக இணைந்து இன்னும் நிலைகள் கூட்டுகின்றேன்
   கூட்டவே அரங்கன் தொடர்பு கொண்டால்
   குவலயத்தில் உலகோர்க்கு மாற்றம் உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–